**சுருக்கம்**

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா – மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின் அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டம், செவிலிமேடு பேரூராட்சிப் பகுதியில் ரூ. 102.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வது – குறிப்பான நிர்வாக அனுமதி வழங்குதல் - ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 4) துறை**

**அரசாணை (நிலை) எண். 37** **நாள்: 18.02.2010**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண். 233, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 05.12.2009.
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண். 21315/2009/23, நாள் 21.12.2009.

\- - - - - -

ஆணை:

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவில் " காஞ்சிபுரத்தில் அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு மூலம் சில வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்" என மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பினை வெளியிட்டார். அவ்வறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் காஞ்சிபுரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய 17 வளர்ச்சிப் பணிகளை சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளும் ரூ. 1715.00 இலட்சம் செலவில் மேற்கொள்வதற்கான ஒட்டுமொத்த நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஒன்றாவதாக படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இவ்வரசாணையில், இப்பணிகளுக்கான விரிவான மதிப்பீடுகளை (Detailed Estimate) அந்தந்த துறைத் தலைவர்களிடமிருந்து பெற்று சம்பந்தப்பட்ட அரசு துறைகள் ஆய்வு செய்து நிதித் துறையின் இசைவுடன் குறிப்பான நிர்வாக ஒப்புதலினைப் பெற்று ஆணை வெளியிட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. முதலாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஒட்டுமொத்த நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள 17 பணிகளில் செவிலிமேடு பேரூராட்சிப் பகுதியில் செவிலிமேடு பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் கீழ்க்கண்டவாறு உள்ளன:-

(i) ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்லவன் நகர் பூங்காவினை அபிவிருத்தி செய்தல்

(ii) ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் கன்னிகாபுரத்தில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல்.

(iii) ரூ. 5.00 இலட்சம் மதிப்பீட்டில் காமராஜர் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல்.

(iv) ரூ. 8.00 இலட்சம் மதிப்பீட்டில் செவிலிமேடு பேரூராட்சிப் பகுதியில் இரண்டு இடங்களில் உயர்கோபுர மின்விளக்குகள் அமைத்தல்.

(v) ரூ. 60.00 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பதி குளம் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல்.

3. மேலே பத்தி – 2-ல் குறிப்பிட்டுள்ள பணிகளை ரூ. 102.00 இலட்சம் (ரூபாய் நூற்றியிரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள விரிவான மதிப்பீட்டுடன் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளதாகவும், இதற்கான ஒப்புதலை செவிலிமேடு பேரூராட்சி மன்றம் தனது தீர்மானம் எண். 546 நாள் 29.10.2009 –ல் வழங்கியுள்ளது என்றும் தெரிவித்து அதற்கான குறிப்பான நிர்வாக அனுமதியினை வழங்குமாறு பேரூராட்சி இயக்குநரின் இரண்டாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி -3- ல் உள்ள பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில் பேரூராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, மேலே பத்தி - 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை ரூ. 102.00 இலட்சம் ( ரூபாய் நூற்றியிரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் செவிலிமேடு பேரூராட்சி நிர்வாகம் மேற்கொள்ள குறிப்பான நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேற்குறிப்பிட்ட பணிகளை உடனடியாக துவக்கி ஏப்ரல் 2010–க்கு முன் முடிவடையுமாறு செயல்படுத்த வேண்டும் என்றும், மேலும் இப்பணிகளின் முன்னேற்றம் குறித்த காலமுறை அறிக்கையினை இரு வாரங்களுக்கு ஒருமுறை அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் 23.1.2010 நாளிட்ட அ.சா.கு.எண். 27/FS/P/2010 –ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலர்**

பெறுநர்

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 108.
மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம்,
செயல் அலுவலர், செவிலிமேடு பேரூராட்சி,
இயக்குநர்,
உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, சென்னை – 108.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச் செயலாளர்.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( பேரூ -2/அந II) துறை. சென்னை – 9.

**-/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/-**

**பிரிவு அலுவலர்**